செங்குன்றம் முதல் பெரியபாளையம் வரை இயக்கப்படும் எண் 547 வழித்தடப் பேருந்து, பாபடியநல்லூர், செமிலிவாக்கம், சோழவரம், காரனோடை, புதுவாயல், பனப்பாக்கம், அகரம், ஆரணி, கொசவம்பேட்டை வழியாகச் செல்கிறது.

பேருந்து வழித்தட எண் 566, குன்றத்தூரில் இருந்து திருப்போரூர் வரை செல்கிறது. இது, அனகாபுத்தூர், பம்மல், குரோம்பேட்டை, தாம்பரம், பெருங்களத்தூர், வண்டலூர், புதுப்பாக்கம், கேளம்பாக்கம் வழியாக இயக்கப்படுகிறது.

வேலைவாய்ப்பு பயிற்சித் துறை சார்பில்

டிஎன்பிஎஸ்சி, ரயில்வே தேர்வுக்கு இலவச பயிற்சி

■ சென்னை

வேலைவாய்ப்பு பயிற்சித் துறை சார்பில் டிஎன்பிஎஸ்சி, எஸ்எஸ்சி, ரயில்வே தேர்வுகளுக்கு சென்னையில் இலவசப் பயிற்சி வகுப்புகள் நடத்தப்படுகின்றன.

இது தொடர்பாக வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையின் இயக்குநர் சி.பழனி நேற்று வெளியிட்ட செய்திக்குறிப்பு:

வேலைவாய்ப்பு, பயிற்சித் துறையின் கீழ் சென்னை கிண்டியில் இயங்கிவரும் மாநில தொழில்நெறி வழிகாட்டும் மையத்தில் உளவியல் பகுப்பாய்வு சோதனைகளுடன் வழிகாட்டுதல், பள்ளி, கல்லூரி மாணவர்களுக்கு தொழில்நெறி வழிகாட்டுதல் மற்றும் ஆலோசனை வழங்குதல், போட்டித் தேர்வுகளுக்கு நேரடி பயிற்சி வகுப்புகள், மாதிரித் தேர்வுகள் நடத்துதல், கல்வி தொலைக்காட்சி வாயிலாக போட்டித் தேர்வுகளுக்கு பயிற்சி அளித்தல் என பல்வேறு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

தற்போது டிஎன்பிஎஸ்சி ஒருங்கிணைந்த தொழில்நுட்பப் பணிகள் தேர்வு மற்றும் குரூப்-1, குரூப்-2, குரூப்-4 தேர்வுகள், ரயில்வே உதவி லோகோ பைலட் தேர்வு மற்றும் குரூப்-டி தேர்வு, எஸ்எஸ்சி சிஜிஎல் தேர்வு ஆகியவற்றுக்கு ஜூன் 1 முதல் பயிற்சி வகுப்புகள் நடத்தப்பட்டு வருகின்றன. டிஎன்பிஎஸ்சி தேர்வுகளுக்கான வகுப்புகள் திங்கள், புதன், வெள்ளி ஆகிய நாட்களிலும், ரயில்வே, எஸ்எஸ்சி தேர்வுகளுக்கான வகுப்புகள் செவ்வாய், வியாழன் ஆகிய நாட்களிலும் காலை 10 முதல் மதியம் 1 மணிவரை நேரடியாகவும், அதே நாட்களில் மாலை 6.30 முதல் இரவு 8.30 வரை ஆன்லைன் வழியாகவும் நடைபெறுகின்றன.

போட்டித் தேர்வுகளுக்கு தயாராகிவரும் மாணவர்கள் இந்த பயிற்சி வகுப்புகளில் நேரடியாக கலந்துகொண்டு பயன் பெறலாம். இதில் சேர விரும்புவோர் ஆதார் அட்டை நகல், பாஸ்போர்ட் அளவு போட்டோவுடன் கிண்டி திருவிக தொழிற்பேட்டை பேருந்து நிலையம் (ரயில்வே ஸ்டேஷன் எதிரில்) அருகே உள்ள டான்சி கட்டிடத்தின் முதல் தளத்தில் (ஏ-28) இயங்கும் மாநில தொழில் நெறி வழிகாட்டு மையத்தை (தொடர்பு எண்: 9361566648) நேரில் அணுகலாம்.

சத்குருவின் காவேரி கூக்குரல் சார்பில்

உணவுக்காடு வளர்ப்பு, தென்னிந்திய பழத் திருவிழா

திருச்சியில் நாளை கருத்தரங்கம், கண்காட்சி

■ சென்னை

சத்குருவின் காவேரி கூக்குரல் இயக்கம் சார்பில் 'உணவுக்காடு வளர்ப்பு மற்றும் தென்னிந்திய பழங்கள் திருவிழா' என்ற தலைப்பிலான மாபெரும் கருத்தரங்கம் மற்றும் கண்காட்சி, திருச்சி எஸ்ஆர்எம் அறிவியல் மற்றும் தொழில்நுட்ப நிறுவன வளாகத்தில் நாளை (ஜூன் 14) நடைபெற உள்ளது.

இது தொடர்பான பத்திரிகையாளர் சந்திப்பில், மண் காப்போம் - காவேரி கூக்குரல் இயக்கத்தின் கள ஒருங்கிணைப்பாளர்கள் சுவாமி ஸ்ரீமுகா, தமிழ்மாறன், மண்வள மேம்பாட்டுக்காக ஐநா விருது வென்ற ஒரே இந்திய விவசாயி வள்ளுவன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

தமிழ்மாறன் பேசுகையில், "ஒற்றைப்பயிர் சாகுபடி முறையால் விவசாயிகளுக்கு வருமானம் குறைகிறது. ஆகையால், விவசாயிகளிடம் மரம் சார்ந்த பல பயிர் சாகுபடி விவசாய முறையை பெருமளவில் முன்னெடுத்து வருகிறோம். இதனால் மண் வளம், மண்ணின் நீர்ப்பிடிக்கும் திறன், நதிநீர் வளம் ஆகியன உயர்வதோடு விவசாயிகளின் வருமானமும் அதிகளவில் உயர்கிறது" என்றார்.

ஐநா விருது வென்ற விவசாயி வள்ளுவன் பேசுகையில், "2009-ம் ஆண்டுக்கு முன்பு நானும் ஒற்றைப்பயிர் சாகுபடியையே செய்து வந்தேன். இன்று தென்னையுடன் 14 வகையான பயிர்களை ஊடுபயிராக சாகுபடி செய்து, மண்ணின் வளத்தையும் நீர் பிடிப்புத் தன்மையையும் உயர்த்தி உள்ளேன். இதன் மூலம் ஆண்டு முழுவதும் தொடர்ச்சியான வருமானம் கிடைப்பதுடன், எனது விவசாய வருமானம் 5 முதல் 8 மடங்கு வரை அதிகரித்துள்ளது" எனக் கூறினார்.

முக்கிய சிறப்பம்சங்கள்

இந்த நிகழ்வு 3 முக்கிய அம்சங்களை உள்ளடக்கி நடைபெறுகிறது. முதலாவதாக இந்தியாவின் 4 முன்னணி வேளாண் ஆராய்ச்சி நிறுவனங்களின் விஞ்ஞானிகள், வல்லுநர்கள் பங்கேற்று நவீன தொழில்நுட்ப அறிவைப் பகிர்ந்து கொள்கின்றனர். இரண்டாவதாக 5 மாநிலங்களைச் சேர்ந்த முன்னோடி வெற்றி விவசாயிகள் தங்களது நேரடி சாகுபடி அனுபவங்களையும் வழங்குகின்றனர். மூன்றாவதாக நுகர்வோருக்கும் இயற்கை முறையில் விவசாயம் மேற்கொள்ளும் விவசாயிகளுக்கும் இடையே நேரடித் தொடர்பை உருவாக்குவதற்காக பிரம்மாண்டமான வேளாண் கண்காட்சி நடைபெறுகிறது.

மேலும் தென்னையுடன் உணவுக்காடு அமைத்து, தினமும் வருமானம் பெறுவது குறித்தும் 300 வகை மா, 100 வகை பலா வகைகளைக் காட்சிப் படுத்தி, அது குறித்த தொழில்நுட்பங்களையும் விளக்க உள்ளனர். இதேபோல வாழை, அவகாடோ சாகுபடி, பழ வகைகளை மதிப்பு கூட்டி சந்தைப்படுத்துதல், முன்னோடி விவசாயிகளின் அனுபவப் பகிர்வுகள் ஆகியவையும் நடைபெறவுள்ளன.

இந்த நிகழ்ச்சியில் பங்கேற்க முன்பதிவு அவசியம். முன்பதிவு செய்ய forms.gle/rvAxzjx82Gn33uhp8 என்ற இணைப்பைப் பயன்படுத்தலாம் அல்லது 9442590079, 9442590081 ஆகிய எண்களில் தொடர்பு கொள்ளலாம்.

கத்திமுனையில் வழிப்பறி: 3 பேர் கைது

■ சென்னை

தூத்துக்குடி, விளாத்திகுளம் பகுதியைச் சேர்ந்தவர் அருண் செல்வம் (19). உணவகம் ஒன்றில் வேலை செய்கிறார். இவர் நேற்று முன்தினம் இரவு வேளச்சேரி-தரமணி சாலை ஓரமாக நின்றிருந்தபோது, பைக்கில் வந்த 3 பேர் கத்தி முனையில் அருண் செல்வத்திடம் இருந்த பணம், செல்போனை பறித்து தப்பினர். இதுகுறித்து போலீஸார் நடத்திய விசாரணையில், வழிப்பறியில் ஈடுபட்ட விபின்சன், பிரதீப்குமார், தர்மலிங்கத்தை கைது செய்து சிறையில் அடைத்தனர்.

பைவ்-ஸ்டார் பிசினஸ் பைனான்ஸ் லிமிடெட்
CIN: U65991TN1984PLC010844
பதிவு அலுவலகம்: புதிய எண். 27, பழைய எண்.4, டெய்லர்ஸ் ரோடு, கிழ்ப்பாக்கம், சென்னை– 600 010
Ph: 044- 4610 6200, E-Mail: info@fivestargroup.in, Website: www.fivestargroup.in

கடன்தாரர்கள் / ஜாமின்தாரர்கள் / அடமானதாரர்களுக்கான அறிவிப்பு

2002-ம் ஆண்டு கடனீட்டுச் சொத்துக்களை ரொக்கமாக்குதல் நிதி சொத்துக்களைச் சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்தின் உரிமை அமலாக்கச் சட்டம் பிரிவு 13(2)-ன் கீழ் மாற்று முகச்சார்வு அறிவிப்பு.

வ.எண்.1: கடன்தாரர்: 1.Mrs.சாந்தி.S, W/o.சேதுராமன், **2.Mr.சேதுமாதவன்**, S/o.சேதுராமன், **3.Mr.ரவிவர்மன்.S**, S/o.சேதுராமன், **4.Ms.பிரதீபா.S**, D/o.சேதுராமன், **அனைவரது முகவரி,** எண்.1, சேதுபதி தெரு, சீனிவாசன் நகர், அம்பத்தூர், சென்னை-600053 **மேலும் குடியிருப்பு முகவரி, சொத்து முகவரி:** எண்.1, சேதுபதி தெரு, சீனிவாசன் நகர், அம்பத்தூர், சென்னை-600053; **கோரிக்கை அறிவிப்பு தேதி: 20.05.2026; NPA தேதி: 29.02.2020; கடன் வசதி: பிசினஸ் கடன்,** கடன் கணக்கு எண். FSTNLALONS000005001745 தேதி 01.08.2017 கடன்தொகை ₹ 6,00,000/- **கடன் நிலுவைத்தொகை: 20.05.2026** அன்றுள்ளபடி ₹ **20,33,166.53** மற்றும் 21.05.2026 முதல் கடன் தொகை முழுவதையும் திரும்ப செலுத்தும் காலம் வரை ஒப்புக்கொள்ளப்பட்டபடி வட்டி மற்றும் அபராத வட்டி மாதத்திற்கு 3% மற்றும் இதர செலவுகள்.

சொத்து விவரம்

தென் சென்னை பதிவு மாவட்டம், அம்பத்தூர் சார்-பதிவு மாவட்டம் எல்லைக்குட்பட்ட, சர்வே எண்.3/5, **சீனிவாசா நகர், ஒரகடம் கிராமம், அம்பத்தூர் தாலுகா மற்றும் டவுன், திருவள்ளூர் மாவட்டம்** என்னும் முகவரியில் **975 சதுர அடி நிலம் அதிலுள்ள கட்டிடம்,** அதனுடன் இணைந்த துண்டுகளும் பகுதிகளும். எல்லைகள்: வடக்கு: மனை எண்.32, தெற்கு: மனை எண்.30, கிழக்கு: 16 அடி ரோடு, மேற்கு: ஸ்கூல். அளவுகள்: கிழக்கு மேற்காக வடக்கு பக்கம்: 23 அடி, கிழக்கு மேற்காக தெற்கு பக்கம்: 24 அடி, வடக்கு தெற்காக கிழக்கு பக்கம்: 42 அடி, வடக்கு தெற்காக மேற்கு பக்கம்: 41 அடி.

வ.எண்.2: கடன்தாரர்: 1.Mrs.சாந்தி.N, W/o.நீலமங்கலம், **2.Mr.கௌதம்.N**, S/o.நீலமங்கலம், **3.Mr.நீலமங்கலம்.G**, S/o.கோபால்.T, **4.Mr.தினேஷ்.N** S/o.நீலமங்கலம், **அனைவரது முகவரி,** எண்.16, ப்ளாக் எண்.6, பழைய எண்.300, புதிய எண்.324, தாஸ் நகர், 8வது தெரு, கன்னிகாபுரம், சென்னை-600012 **மற்றும் மேலும் குடியிருப்பு முகவரி, சொத்து முகவரி,** எண்.16, ப்ளாக் எண்.6, பழைய எண்.300, புதிய எண்.324, தாஸ் நகர், 8வது தெரு, கன்னிகாபுரம், சென்னை-600012; **கோரிக்கை அறிவிப்பு தேதி: 20.05.2026; NPA தேதி: 10.05.2020; கடன் வசதி: பிசினஸ் கடன்,** கடன் கணக்கு எண். FSTNLALONS000005048731 தேதி 26.07.2018 கடன்தொகை ₹ 7,00,000/- **கடன் நிலுவைத்தொகை: 20.05.2026** அன்றுள்ளபடி ₹ **20,90,055.30** மற்றும் 21.05.2026 முதல் கடன் தொகை முழுவதையும் திரும்ப செலுத்தும் காலம் வரை ஒப்புக்கொள்ளப்பட்டபடி வட்டி மற்றும் அபராத வட்டி மாதத்திற்கு 3% மற்றும் இதர செலவுகள்.

சொத்து விவரம்

தென் சென்னை பதிவு மாவட்டம், புரசைவாக்கம் சார்-பதிவு மாவட்டம் எல்லைக்குட்பட்ட, R.S.எண்.128/1 பகுதி, **மனை எண்.16, ப்ளாக் எண்.6, பழைய எண்.300, புதிய எண்.324, தாஸ் நகர், 8வது தெரு, கன்னிகாபுரம், பெரம்பூர் - புரசைவாக்கம் தாலுகா, சென்னை மாவட்டம்** என்னும் முகவரியில் **736 சதுர அடி நிலம் அதிலுள்ள கட்டிடம்,** அதனுடன் இணைந்த துண்டுகளும் பகுதிகளும். எல்லைகள்: வடக்கு: தாஸ் நகர் பல்லன் 8வது தெரு, தெற்கு: மனை எண்.47-ல் உள்ள அன்னபூரணி வீடு, கிழக்கு: மனை எண்.47-ல் உள்ள லட்சுமி வீடு, மேற்கு: மனை எண்.15-ல் உள்ள சாந்தி வீடு. அளவுகள்: கிழக்கு மேற்காக இரு பக்கமும் 32 அடி, தெற்கு வடக்காக இரு பக்கமும் 23 அடி.

மேற்படி கடனை அடைப்பதற்கு ஈடாக நீங்கள் அனைவரும் கடன் ஒப்பந்தம் மற்றும் ஜாமீன் ஒப்பந்தம் கையெழுத்திட்டும் மேலே விவரிக்கப்பட்டுள்ள சொத்தின் உரிமை பத்திரங்களை உரியதான முறையில் அடமானம் வைத்தும் **M/s. பைவ் ஸ்டார் பிசினஸ் பைனான்ஸ் லிமிடெட், அம்பத்தூர் கிளை வசம் ஒப்படைத்துள்ளீர்கள்.**

நீங்கள் கடனை சரிவர திரும்ப செலுத்த தவறியபடியால் கூடுதல் வட்டியையும் செலுத்த வேண்டிய பொறுப்பு உங்களுடையது. எனவே மேற்படி சட்டம் பிரிவு 13(2)-ன் கீழ் மேற்காணும் பாக்கித் தொகை மற்றும் மேற்கண்ட தேதி முதல் வட்டி, இதர செலவுகளையும் செலுத்துமாறு **20.05.2026** தேதியில் நோட்டீஸ் ஒன்றையும் கம்பெனி பதிவு தபாலில் ஏற்பு அட்டையுடன் உங்கள் அனைவருக்கும் அனுப்பியது.

இந்த நிலையில் கடனை திரும்ப செலுத்த தவறிவிட்டீர்கள் என்பதையும் கம்பெனியின் கணக்கையும் முறையாக பராமரிக்காமல் முறை தவறி இருக்கிறீர்கள் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறோம். **இதனால் சிசர்வ் பாங்க் ஆப் இந்தியா வழிக்காட்டுதலின் படி உங்கள் கடன் கணக்கு வாராகடன் (Non - Performing Asset (NPA)) என மேற்கூறியபடி வகைப்படுத்தப்பட்டுள்ளது** என தெரிவித்துக்கொள்கிறோம். ஆகவே நாளது தேதிவரை உள்ள மேற்படி கடன் பாக்கியை கம்பெனிக்கு செலுத்த வேண்டிய பொறுப்பு உங்களுடையது. எனவே நீங்கள் மேற்படி கடன் பாக்கித் தொகையும் மற்றும் அதற்குண்டான வட்டியையும் செலுத்துமாறு இதன் மூலம் கோரப்படுகிறது. தவறினால் 2002-ம் ஆண்டு கடனீட்டுச் சொத்துக்களை ரொக்கமாக்குதல் நிதி சொத்துக்களைச் சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்தின் உரிமை அமலாக்கச் சட்டத்தின் கீழ், கம்பெனிக்குள்ள அதிகாரத்தை பயன்படுத்தி கம்பெனியிடம் கடனுக்கு ஈடாக அடமானம் வைக்கப்பட்ட சொத்தினை தன் வசம் (சுவாதீனம்) எடுத்துக்கொள்ளும் மேற்படி சட்டத்தின் படி மேற்காணும் சொத்தினை உங்களிடமிருந்து சுவாதீனம் செய்து கொள்ளவும் மேலும் அடமானச் சொத்தினை குத்தகை, விற்பனை மூலம் உரிமை மாற்றித்தரவும் சொத்தினை நிர்வகிக்க எந்தவொரு நபரையும் நியமிக்கவும், சொத்து நிர்வாகத்தை கம்பெனியே எடுத்துக்கொள்ளவும் உங்களிடமிருந்து வரவேண்டிய கடன் பாக்கியை, சொத்தை விற்பதனால் கிடைக்கும் தொகையிலிருந்து வசூலிக்கவும் கழித்துக் கொள்ளவும் கம்பெனிக்கு உரிமையுண்டு.

கம்பெனியின் முன் அனுமதி இல்லாமல் மேற்கண்ட சொத்துக்களை விற்கவோ, குத்தகைக்கு விடவோ ஈடு அடமானம் செய்வதோ, அல்லது வேறு ஏதேனும் பாரதீனமோ, வில்லங்கமோ செய்யக்கூடாது எனவும் எச்சரிக்கப்படுகிறார்கள்.

ஈடுபெற்ற சொத்துக்களை விற்பதன் மூலம் கிடைக்கும் தொகை கடன் தொகை முழுவதற்கும் போதுமானதாக இல்லாவிடில், நீங்கள் செலுத்த வேண்டிய பாக்கி தொகையை வசூலிக்க, கடன் வசூல் தீர்ப்பாயம் / நீதிமன்றம் முன்பு உங்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்க கம்பெனிக்கு உரிமை உண்டு என்பதை கவனத்தில் கொள்ளவும்.

கடனுக்கு ஈடாக அடமானம் வைக்கப்பட்டுள்ள சொத்தினை மீட்பதற்குரிய கால வரம்பு குறித்து சட்ட பிரிவு 13(8) வரத்துக்களின் மீது கடன்தாரர்கள் / அடமானதாரர்கள் / ஜாமீன்தாரர்களின் கவனம் ஈர்க்கப்படுகிறது. (ஈடுபெற்ற சொத்து).

இடம்: சென்னை
தேதி: 20.05.2026
அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி
M/s. பைவ் ஸ்டார் பிசினஸ் பைனான்ஸ் லிமிடெட்

ஆட்டோ கட்டணத்தை தமிழக அரசு உயர்த்த வேண்டும்

ராமதாஸ் வலியுறுத்தல்

■ சென்னை

பாமக நிறுவனர் ராமதாஸ் நேற்று வெளியிட்ட அறிக்கை:

தமிழகத்தில் ஆட்டோக்களுக்கான கட்டணம் கடைசியாக 2013-ம் ஆண்டு நிர்ணயிக்கப்பட்டது. அப்போது நிர்ணயிக்கப்பட்ட கட்டணப்படி ஆரம்ப 1.8 கிலோமீட்டருக்கு ரூ.25, அதன்பின் ஒவ்வொரு கிலோமீட்டருக்கும் ரூ.12 என நிர்ணயிக்கப்பட்டது. கடந்த 13 ஆண்டுகளாக இந்த கட்டணத்தில் எந்த மாற்றமும் செய்யப்படவில்லை. ஆனால், இந்த காலக்கட்டத்தில் பெட்ரோல், டீசல் மற்றும் சிஎன்ஜி எரிபொருட்களின் விலை பல மடங்கு உயர்ந்துள்ளது. 2013-ம் ஆண்டில் லிட்டருக்கு ரூ.65 முதல் ரூ.70 வரை இருந்த பெட்ரோல் விலை தற்போது ரூ.100-ஐ தாண்டி உயர்ந்துள்ளது. அதேபோல் சிஎன்ஜி. எரிபொருள் விலையும் குறிப்பிடத்தக்க அளவில் உயர்ந்துள்ளது.

ஆரம்ப கட்டணத்தை ரூ.40 ஆகவும், ஒவ்வொரு கிலோமீட்டருக்கும் ரூ.18 ஆகவும் நிர்ணயிப்பது குறித்து அரசு பரிசீலிக்கலாம். மேலும், ஒவ்வொரு 3 ஆண்டுகளுக்குஒருமுறை எரிபொருள் விலை உயர்வின் அடிப்படையில் கட்டணத்தை தானாக மறுஆய்வு செய்யும் நடைமுறையை ஏற்படுத்த வேண்டும். இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

ஓய்வுபெற்ற மருத்துவர்களுக்கு பணி நீட்டிப்பு கூடாது

தமிழ்நாடு அரசு டாக்டர்கள் சங்கம் வேண்டுகோள்

■ சென்னை

ஓய்வுபெற்ற அரசு மருத்துவர்களுக்கு பணி நீட்டிப்பு வழங்கக் கூடாது என்று தமிழ்நாடு அரசு டாக்டர்கள் சங்கத்தின் மாநிலத் தலைவர் மருத்துவர் பி.பால கிருஷ்ணன் வெளியிட்ட அறிக்கையில் கூறியிருப்பதாவது:

திமுக, அதிமுக ஆட்சியில் ஓய்வுபெற்ற அரசு மருத்துவர்களில் தங்களுக்கு சாதகமானவர்களுக்கு பணி நீட்டிப்பை வழங்கினார்கள். இதனால், சீனியர் மருத்துவர்களுக்கு முறையான பதவி உயர்வு கிடைக்காத நிலை ஏற்பட்டது. இதைக் கண்டித்து பல்வேறு போராட்டங்களை நடத்தினோம்.

ஓய்வு பெற்றவர்கள் உயர் பொறுப்புகளில் வரும்போது முறைகேடுகள் நடைபெற வாய்ப்புள்ளது. அவர்கள் மீது துறைரீதியான நடவடிக்கையும் எடுக்க முடியாது. அதேநேரம், அரசு மருத்துவர்கள் அரசுக்கு கட்டுப்பட்டவர்களாக இருப்பார்கள் என்பதைக் கவனத்தில் கொண்டு, கடந்த ஆட்சியாளர்கள் செய்த தவறை, தவெக அரசு செய்யாது என்று நம்புகிறோம்.

இவ்வாறு அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

ஜனா ஸ்மால் ஃபைனான்ஸ் பேங்க் (ஒரு அட்டவணை கமர்ஷியல் பேங்க்)

பதிவு அலுவலகம்: தி ஃபர்வே, தரை & முதல் தளம், சர்வே எண்.10/1, 11/2 & 12/2B, ஆஃப் டாம்லூர், கொரமங்களம் உள் வட்ட சாலை, EGL பிசினஸ் பார்க் அடுத்து, செல்லகாட்டா, பெங்களூர்-560071. கிளை அலுவலகம் : எண்.28/36, 1வது தளம், தெற்கு மேற்கு போக் சாலை, தி.நகர், சென்னை - 600017.

மின்-ஏலம் அறிவிப்பு

2002-ம் ஆண்டு (SARFAESI ACT) கடனீட்டுச் சொத்துக்களை ரொக்கமாக்குதல் மற்றும் மறுகட்டமைப்பு செய்தல் மற்றும் பாதுகாப்பு வட்டிச் சட்டத்தின் அமலாக்கம் மற்றும் 2002-ம் ஆண்டு (அமலாக்கம்) பாதுகாப்பு வட்டி விதிகள் 8(6) மற்றும் 9-ன் கீழ் மின்-ஏலம் மூலம் விற்பனை செய்வதற்கான பொது அறிவிப்பு.

கீழே கையொப்பமிட்ட **ஜனா ஸ்மால் ஃபைனான்ஸ் பேங்க் லிமிடெட்-ன்** அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி ஆனவர் SARFAESI சட்டம் பிரிவு 13(4)ன் கீழ், கீழே விவரிக்கப்பட்டுள்ள சொத்துக்களை தனது **சுவாதீனத்தில்** எடுத்துக்கொண்டார். இதன் மூலம் கடன்தாரர் குறிப்பாகவும், பொது மக்களுக்கும் அறிவிப்பதாவது, கீழ்க்கண்ட நபர்களிடமிருந்து, வங்கிக்கு செலுத்த வேண்டிய கடன் தொகையை வசூலிக்கும் பொருட்டு, கீழ்குறிப்பிட்ட கணக்குகளின் அடமான சொத்துக்களை **"உள்ள இடத்தில் உள்ளவாறு" மற்றும் "உள்ளது உள்ளவாறு"** எனும் அடிப்படையில் **ஆன்-லைன் ஏலத்தின்** (e-auction) மூலம் விதிகள் மற்றும் நிபந்தனைகளின்படி கீழ்குறிப்பிட்ட நாட்களில் விற்பனை செய்ய முடிவு செய்யப்பட்டுள்ளது.

வ. எண்.	கடன் கணக்கு எண்.	அசல் கடன்தாரர்/ இணை-கடன்தாரர்/ ஜாமீன்தாரர் பெயர்	13-2 அறிவிப்பு நாள்	சுவாதீன நாள்	10.06.2026 அன்றைய தற்போதைய நிலுவை தொகை	சொத்தினை பார்வையிடும் நாள் & நேரம்	ரிசர்வ் தொகை INR-ல்	முன்வைப்பு தொகை (EMD) INR-ல்	மின்-ஏலம் நாள் மற்றும் நேரம்	ஏலம் சமர்ப்பிக்கும் கடைசி நாள், நேரம் மற்றும் இடம்
1	45979430000042	1) திரு. பூபதி P. 2) திருமதி. B மோகனா	28-04-2021	08-09-2021	ரூ.56,91,731.95 (ரூபாய் ஐம்பத்தி ஆறு இலட்சத்து தொண்ணூற்றி ஒராயிரத்து எழுநூற்றி முப்பத்தி ஒன்று மற்றும் பைசா தொண்ணூற்றி ஐந்து மட்டும்)	27.06.2026 நேரம் காலை 9.30 மணிமுதல் மாலை 5.00 மணிவரை	ரூ.26,66,000/- (ரூபாய் இருபத்தி ஆறு இலட்சத்து அறுபத்தி ஆறாயிரம் மட்டும்)	ரூ.2,66,600/- (ரூபாய் இரண்டு இலட்சத்து அறுபத்தி ஆறாயிரத்து ஆறுநூறு மட்டும்)	30.06.2026 காலை 11.00 மணி முதல் மாலை 02.00 மணிவரை	29.06.2026, மாலை 5.00 மணிவரை, ஜனா ஸ்மால் ஃபைனான்ஸ் பேங்க் லிமிடெட், எண்.28/36, தெற்கு மேற்கு போக் சாலை, தி.நகர், சென்னை - 600017.

சொத்து விவரம் : அனைத்து பகுதிகளும், மனை எண்.36, கதவு எண்.9, 11வது முதல் குறுக்கு தெரு, புதிய குமரன் நகர், சோழிங்கநல்லூர், சென்னை - 600 119, ச.எண். 258/2 மற்றும் 251/4, பட்டா எண். 3732, புதிய ச.எண். 258/2ஏ1பி, குமரன் நகர் லேஅவுட், சோழிங்கநல்லூர் கிராமம், தாம்பரம் தாலுகா, காஞ்சிபுரம் மாவட்டத்தில் அமைந்துள்ள, அளவுகள் 2156 சதுர அடியில் 718 சதுர அடி தெற்கு பக்கம், அத்துடன் கட்டிடம் உட்பட்ட மற்றும் வசதிகள் உட்பட மற்றும் **நிலம் எல்லைகள் : வடக்கில் :** பூபதி - தனலட்சுமி அவர்களின் மீதமுள்ள சொத்து, **தெற்கில் :** மனை எண்.24, **கிழக்கில் :** 30 அடி சாலை, தற்போது 5 அடி சாலை, **மேற்கில் :** மனை எண்.37. நீலாங்கரை சார் பதிவு மாவட்டம் மற்றும் தென் சென்னை பதிவு மாவட்டத்திற்குட்பட்டது.

மின் ஏலமானது **"உள்ள இடத்தில் உள்ளவாறு" & "உள்ளது உள்ளவாறு"** என்ற அடிப்படையில் **"ஆன்லைனில்"** நடத்தப்படும். வங்கியின் அங்கீகரிக்கப்பட்ட சேவை வழங்குனர் நிறுவனத்தின் மூலம் இணையதளம் www.auctionbazaar.com வழியாக ஏலம் நடத்தப்படும். மேலும் விபரங்களுக்கு, விதிகள் மற்றும் ஆன்லைன் மின-ஏல பயிற்சி, விற்பனை விதிகள் மற்றும் நிபந்தனைகள் அடங்கிய மின் ஏல டெண்டர் ஆவணம் ஆகியவற்றிக்கு **தொடர்பு எண். 8370969696 & 7997043999. Email id: contact@auctionbazaar.com & support@auctionbazaar.com.**

மேலும் நிபந்தனை மற்றும் விதிகள் விபரங்களுக்கு, ஏல விபரங்கள் மற்றும் மற்ற சொத்தின் விவரங்களுக்கு **ஜனா ஸ்மால் ஃபைனான்ஸ் பேங்க் அதிகாரிகள்: திரு. கௌசிக் பேக் (Mob. No.7019949040), திரு. ரஞ்சன் நாயக், (Mob. No. 6362951653) & R கண்ணன் (Mob. No. 9071243088)** தொடர்பு கொள்ளவும். அங்கீகரிக்கப்பட்ட அதிகாரிக்குத் தெரிந்த வரையில் சொத்துக்களின் மீது எந்த வில்லங்கங்களும் இல்லை, எனினும் ஏலத்தில் விடப்படும் சொத்துக்கள் விஷயமாக வில்லங்கங்கள் இதன் உரிமை குறித்து ஆர்வமுள்ள விலைக்குறிப்பீட்டாளர்கள் சொந்தமாக விசாரித்து அறிந்துகொள்வது அவசியம். இந்த அறிவிப்பானது மேற்குறிப்பிட்ட கடன்தாரர்கள்/ ஜாமீன்தாரர்கள்/ அடமானதாரர்கள் அடமான சொத்துக்களின் மின்-ஏலம் அட்டவணை அறிந்து கொள்ள அறிவிப்பாகும். கடன்தாரர்/ ஜாமீன்தாரர்/ அடமானதாரர் மின் ஏலம் நாளுக்கு முன் மேற்குறிப்பிட்ட தொகை அத்துடன் வட்டி மற்றும் மற்ற செலவினங்களுடன் செலுத்தலாம், தவறினால் சொத்தானது விற்பனை செய்யப்படும் மற்றும் ஏதேனும் நிலுவை இருந்தால் வட்டி மற்றும் கட்டணங்களுடன் வசூலிக்கப்படும்.

நாள் : 12.06.2026, இடம் : சென்னை
Sd/- அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி, ஜனா ஸ்மால் ஃபைனான்ஸ் பேங்க் லிமிடெட்

Central Bank of India / **सेन्ट्रल बैंक ऑफ़ इंडिया** / சென்ட்ரல் பாங்க் ஆஃப் இந்தியா
1911 से आपके लिए 'केंद्रित' 'CENTRAL' TO YOU SINCE 1911

பிராட்வே கிளை
எண்.165, ALC காம்ப்ளெக்ஸ், பிராட்வே, சென்னை - 600108 Tel: 044 2346 4308
bmchen1287@centralbank.co.in

SARFAESI சட்டம் 2002-ன் கீழ் இ-ஏல விற்பனை அறிவிப்பு

கடனீட்டு சொத்துக்களை ரொக்கமாக்குதல் நிதிச் சொத்துக்களை சீரமைத்தல் மற்றும் கடனீட்டு சொத்துக்கள் அமலாக்கச் சட்டம் 2002 பாதுகாப்பு நடைமுறை விதிகள் 2002 விதி எண்.8(6)/9(1)-ன் கீழ் அடமானம் வைக்கப்பட்டுள்ள அசையா சொத்துக்களை விற்பனை செய்தல்.

சென்ட்ரல் பேங்க் ஆப் இந்தியா-ல் அடமானத்தில் வைக்கப்பட்டுள்ள கீழ்கண்ட சொத்துக்களை சென்ட்ரல் பேங்க் ஆப் இந்தியாவின் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியால் **நேரடியான சுவாதீனத்தில்** (Physical Possession) எடுக்கப்பட்டு அந்த சொத்துக்கள் **"உள்ள இடத்தில் உள்ளவாறு", "உள்ளது உள்ளவாறு" மற்றும் "எந்த நிலையில் உள்ளதோ அந்த நிலையிலேயே"** என்ற அடிப்படையில் கடன்தாரர்/ அடமானதாரரிடமிருந்து கடன் தொகை மற்றும் வட்டி, இதர செலவுகளை சேர்த்து வசூலிப்பதற்காக **https://baanknet.com** என்ற இணையதளம் வழியாக **விற்பனை செய்யப்படும்** என இதன்மூலம் பொதுமக்களுக்கும் மற்றும் குறிப்பாக கடன்தாரர்களுக்கும் அறிவிக்கப்படுகிறது.

வ.எண்.1: கடன்தாரர்: ஸோ Mr. உமாபதி A, S/o Mr. அண்ணாமலை (அவரது சார்பாக சட்டப்படியான வாரிசுதாரர்) 1.Mrs.செல்வி உமாபதி W/o Mr.உமாபதி A, **2.Mr.U.குணசீலன்** S/o.Mr.உமாபதி A, **3.Miss.U.கீதா** D/o.Mr.உமாபதி A, **முகவரி:** ப்ளாட் எண்.F-27, முதல் தளம், பிளாக் 2, காம்ப்பேக்ட் ஹோம்ஸ், மதுலிகா, வண்டலூர், ஓரகடம் ரோடு, காரணைதாங்கல் கிராமம், ஸ்ரீபெரும்புதூர் தாலுகா, காஞ்சிபுரம்-602 105 **மேலும் முகவரி:** 118, 5வது குறுக்கு தெரு, டிரைவர்ஸ் காலனி, பட்டாபிராம், சென்னை-600072 **மேலும் முகவரி:** 1/1, புதூர்நாடு, திருப்பத்தூர், புதூர் நாடு, வேலூர் 635655

கோரிக்கை அறிவிப்பு தேதி: 06.07.2024 / கடன் நிலுவைத்தொகை: **11.06.2026** அன்றுள்ளபடி ₹ **30,41,742/-** மற்றும் வட்டி, கட்டணங்கள்; **சுவாதீனம் அறிவிப்பு தேதி: 20.11.2024**

அடமானத்தில் உள்ள சொத்து விவரம்

சர்வே விவரங்கள்: சர்வே எண். 23/2A4 பகுதி,23/3 பகுதி, 28/2 பகுதி, 27/5B பகுதி, 27/5C பகுதி, 29/1 பகுதி, 29/2A பகுதி, 29/2B பகுதி, & 31/1 பகுதி.

ஷெட்யூல் A: செங்கல்பட்டு பதிவ